அமைச்சர் துரைமுருகன் துவக்கி வைக்கிறார்! அமைச்சர் பெருமக்கள் - சட்டவல்லுநர்கள் - முன்னணியினர் பங்கேற்பு! இன்று

# கழக சட்டத்துறை 3வது மாநில மாநாடு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

**சென்னை, ஜன. 18 -**

**‘கழக சட்டத்துறை மூன்றாவது மாநில மாநாடு - 2025; செயின்ட் ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகம், ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை, சென்னை - 30, (பச்சையப்பன் கல்லூரி எதிரில்) எனும் முகவரியில் இன்று (18,01,2025 - சனிக்கிழமை) காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை நடைபெறுகிறது.**

**இம்மாநாட்டின் நிறைவாக கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மாநாட்டுச் சிறப்புரையாற்றுகிறார்.**

இம்மாநாடு மங்கள இசை - திராவிட இயக்கப் பாடல்களுடன் காலை 7 மணியளவில் தொடங்குகிறது. பழைய சீவரம் ஜி.காளிதாஸ், கோளேரி ஜி.வினோத்குமார் ஆகியோர் நாதசுவரமும், அடையாறு ஜி.சிலம்பரசன், கும்மிடிப்பூண்டி ஆர்.ஜீவா, எண்ணாயிரம் எஸ்.காமராஜ், வளவனூர் ஆர்.குமரன் ஆகியோர் தவிலும் இராணிப்பேட்டை ஏ.சதீஷ் தாளமும் வாசிக்கின்றனர்.

காலை 8.45 மணிக்கு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கழகக் கொடியேற்றி வைக்கிறார்.

மாநாட்டை காலை 8.50 மணியளவில் அமைச்சர் துரைமுருகன் துவக்கி வைக்கிறார்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கும் இம்மாநாட்டிற்கு இரா.கிரிராஜன் எம்.பி. முன்னிலையும், இரா.தாமரைச் செல்வன் வரவேற்புரையும், என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையும் வகிக்கின்றனர். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி துவக்க உரை ஆற்றுகிறார்.



அதை தொடர்ந்து, தந்தை பெரியார் படத்தை - வழக்கறிஞர் இரா.விடுதலையும், பேரறிஞர் அண்ணா படத்தை - என்.ஆர்.இளங்கோ எம்.பி.யும், முத்தமிழறிஞர் கலைஞர் படத்தை - கே.எம்.தண்டபாணியும், டாக்டர் அம்பேத்கர் படத்தை - பி.ஆர்.அருள்மொழியும், பேராசிரியர் படத்தை - என்.மணிராஜியும் திறந்து வைக்கின்றனர்.

இதில் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, எஸ்.இரகுபதி, பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதிமாறன் எம்.பி., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., மயிலை த.வேலு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

ஜெ.பச்சையப்பன் நன்றி கூறுகிறார்.

முதல் அமர்வாக காலை 10 மணியளவில் என்.ஆர்.இளங்கோ எம்.பி.யின் வரவேற்புரையுடன் ‘ஒரு நாடு ஒரு தேர்தல்’ கலந்துரையாடலில், மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் எஸ்.ஒய்.குரேஷி, மூத்த பத்திரிகையாளர் ‘இந்து’ என்.ராம் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

க.பரந்தாமன் எம்.எல்.ஏ. நன்றி கூறுகிறார்.

இரண்டாவது அமர்வாக பகல் 11.45 மணியளவில் திராவிடவியல் கருத்தரங்கம் நடைபெறுகிறது. சே.சந்துரு தொகுத்து வழங்குகிறார். கே.எஸ்.ரவிச்சந்திரன் வரவேற்புரையும் இரா.விடுதலை முன்னிலையும் வகிக்கின்றனர்.

‘திராவிடவியல்’ எனும் தலைப்பில் ஆ.இராசா எம்.பி.யும், ‘திராவிடமும் பொருளாதார மாற்றமும்’ எனும் தலைப்பில் முனைவர் ஜெ.ஜெயரஞ்சனும், திராவிடமும் தமிழ்த் தேசியமும் எனும் தலைப்பில் பேராசிரியர் அ.கருணானந்தனும், திராவிடம் பேசும் சமத்துவம் எனும் தலைப்பில் சே.மெ.மதிவதனியும், திராவிடத்தால் விளைந்த சமூக மாற்றம் எனும் தலைப்பில் ஊடகவியலாளர் மில்ட்டனும் உரையாற்றுகின்றனர்.

வீ.கவிகணேசன் நன்றி கூறுகிறார்.

பிற்பகல் 2 மணியளவில் புதுகை பூபாளம் கலைக் குழுவின் சிந்தனை சிறப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மூன்றாவது அமர்வாக பிற்பகல் 2.30 மணியளவில் ‘இந்திய மக்களாகிய நாம்’ கருத்துரை நிகழ்வை பெ.ரகு தொகுத்து வழங்குகிறார். சூர்யா வெற்றி கொண்டான் வரவேற்புரையும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. முன்னிலையும் வகிக்கின்றனர்.

இந்திய மக்களாகிய நாம் எனும் தலைப்பில் திருச்சி சிவா எம்.பி.யும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டமும் மகளிர் உரிமைகளும் எனும் தலைப்பில் வழக்கறிஞர் அ.அருள்மொழியும், மாநில உரிமைகள் எனும் தலைப்பில் சூர்யா சேவியரும், இட ஒதுக்கீடு எனும் தலைப்பில் தமிழ் காமராசனும், மாநில நிதிப் பகிர்வு எனும் தலைப்பில் இந்திரகுமார் தேரடியும் உரையாற்றுகின்றனர். மருது கணேஷ் நன்றி கூறுகிறார்.

மாலை 4 மணியளவில் கலைமாமணி ஆக்காட்டி ஆறுமுகம் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மாலை 4.30 மணியளவில் மாநாடு நிறைவு நிகழ்ச்சிக்கு ஆர்.எஸ்.பாரதி முன்னிலையும், இரா.விடுதலை வரவேற்புரையும், என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையும் வகிக்கின்றனர்.

அமைச்சர் துரைமுருகன், டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் கே.என்.நேரு, அந்தியூர் செல்வராஜ் எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் எஸ்.ரகுபதி ஆகியோர் உரையாற்றுகின்றனர். கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநாட்டுச் சிறப்புரையாற்று கிறார்.

ஈரோடு எஸ்.இராதாகிருஷ்ணன் நன்றி கூறுகிறார்.

இம்மாநாட்டில் மாநில நிர்வாகிகள் ஆர்.விடுதலை, என்.ஆர்.இளங்கோ, இ.பரந்தாமன், கே.எஸ்.இரவிச்சந்திரன், என்.மணிராஜ், கே.எம்.தண்டபாணி, சு.ராதாகிருஷ்ணன், பி.ஆர்.அருள்மொழி, இரா.தாமரைச் செல்வன், ஜெ.பச்சையப்பன், சூர்யா வெற்றி கொண்டான், கே.சந்துரு, பெ.ரகு, ஜி.சந்திரபோஸ், என்.மருதுகணேஷ், எஸ்.ராஜா முகம்மது, கே.ஜெ.சரவணன், வீ.கவி கணேசன், கே.மறைமலை, வி.முத்துக்குமார், எ.சுவை கே.சுரேண், எஸ்.எஸ்.மனோஜ், மூ.தினேஷ்குமார், எம்.எஸ்.பி.வீரமணி, மீஞ்சூர் கே.சுரேஷ், எ.கலாநிதி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மாநாட்டை கழக வழக்கறிஞர் அணி அனைத்து மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஒருங்கிணைக்கின்றனர்.

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா நிறைவு விழாவிற்கு வருகை தரும்

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு - கழகத்தினர் திரண்டு வாரீர்!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

**சென்னை, ஜன.18-**

**நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று (18-ஆம் தேதி) பகல் நடைபெறும், சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா நிறைவு விழாவிற்கு வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் - தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திண்டு வந்து, கண்டோன்மெண்ட் - பட்ரோடு அண்ணா சிலை அருகில் இன்று பகல் 11.30 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

இன்று (18-ஆம் தேதி) பகல் 11.30 மணி அளவில் ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள



சென்னை வர்த்தக மையத்தில் உள்ள கூட்ட அரங்கில் சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா நிறைவு விழா நடைபெறவுள்ளது.

இந்த நிறைவு விழாவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று நூல்களை வெளியிட்டு விருதுகளை வழங்கி நிறைவு விழா பேருரை ஆற்றுகிறார்.

இவ்விழாவிற்கு வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் கண்டோன்மெண்ட், அண்ணா சிலை அருகில் இன்று

பகல் 11.30 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இவ்விழாவிற்கு வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சாலை அருகில் மேள, தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

சைதை ஆ.வரதன் தலைமையில் – இரா.துரைராஜ் முன்னிலையில்

## சைதை கிழக்குப் பகுதி 169 ‘அ’ வட்டத்தில் பொங்கல் விழா கோலப்போட்டி!

### 2,500 மகளிர்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பரிசுகள் வழங்குகிறார்!

### துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

*சென்னை, ஜன.18-*

*சென்னை தெற்கு மாவட்ம் சைதை கிழக்கு பகுதி 169 வது அ’ வட்ட தி.மு.க சார்பில் வட்ட துணை செயலாளர் சைதை ஆ.வரதன் தலைமையில், பகுதி செயலாளர் இரா. துரைராஜ் முன்னிலையில் தமிழ்புத்தாண்டு தமிழர் திருநாள் பொங்கல் விழாவை முன்னிட்டு இன்று 18.01.2025 சனிக்கிழமை மகளிருக்கான கோலப்போட்டி 169 வது அ’ வட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் காலை 6.00 மணி முதல் 7.00 மணிவரை நடைபெறுகிறது. அன்று மாலை 6.00 மணியளவில் சின்னமலை எல்.டி.ஜி சாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் போட்டியில் பங்கேற்ற மகளிர்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு, மற்றும் 2,500 மகளிர்களுக்கு ஆறுதல் பரிசு வழங்க உள்ளார்.*

*இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், சைதை மா.அன்பரசன், மின்னல் கந்தப்பன் பகுதி நிர்வாகி மு.பாக்கியலட்சுமி, மாவட்ட பிரதிநிதிகள்: என்.நந்தகோபால், எஸ். ராதாகிருஷ்ணன், சைதை ஏ.மஜித், வட்ட கழக நிர்வாகிகள்: வே. கோதண்டம், டி.கண்ணன், சொ. முருகையன், மு.சாந்தி, கேபிள் சம்பத், கே.பி. மகேஷ், பா.செல்லபாண்டியன் எம்.பாபு. ஏ.எஸ். ரியாஸ் அகமது மற்றும் 169 வது வட்டத்தில் உள்ள அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, பாக முகவர்கள், பாக களப்பணியாளர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்குமாறு வட்ட துணை செயலாளர் சைதை ஆ.வரதன் கேட்டுக்கொள்கிறார்.*




எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு அம்பேத்கர் திடலில் ”என் உடன்” தொண்டு நிறுவனமும் ஜி–7 சேத்துப்பட்டு போலிஸ் சிறுவர்–சிறுமியர் மன்றமும் இணைந்து நடத்திய பொங்கல் விழாவில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, அவ்விழாவையொட்டி சேத்துப்பட்டு பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள், இளைஞர்கள், சிறுவர்கள் இடையே நடத்தப்பெற்ற உறியடி. ரங்கோலி, ஓவியப் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் சார்பில்

## ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக கூடுதல் மனு!

### உச்சநீதிமன்றம் ஏற்று – இறுதி விசாரணைக்காக ஒத்திவைத்தது!

புதுடில்லி, ஜன. 18–

தமிழ்நாட்டில் பல்கலைக் கழக துணை வேந்தர்கள் நியமன விவகாரத்தில் கவர்னருக்கு எதிராக உச்ச நீதி மன்றத்தில் தமிழக அரசு புதிய இடையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளது. இந்த கூடுதல் மனு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்படுவதாக உச்சநீதிமன்றம் நேற்று அறிவித்து இறுதி விசார ணைக் காக ஒத்தி வைத்துள்ளது.

இது பற்றிய விபரம் வருமாறு :-

தமிழ்நாட்டில் பல்கலைகழக துணைவேந்தர்கள் நியமனத்துக்கு எதிரான வழக்கு, ஆளுநர் சட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க மறுப்பதற்கு எதிரான வழக்குகளை இறுதி விசாரணைக்காக உச்சநீதி மன்றம் ஒத்திவைத்தது.



தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி சட்டமன்றம் இயற்றும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காததையும், அரசின் பல்வேறு திட்டம் தொடர்பான ஆணைகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருப்பதை எதிர்த்து தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் ஜெ.பி.பர்திவாலா மற்றும் ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு பட்டியலிடப் பட்டிருந்தது

இந்நிலையில் மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் வெங்கடரமணி ஆஜராகி, தமிழ்நாடு ஆளுநர் தொடர்பான வழக்குகளை ஒரு வாரத்துக்கு பின்னர் விசாரணைக்கு எடுக்க வேண்டும் எனவும்,

இந்த விவகாரத்தில் கூடுதல் முன்னேற்றங்கள் உள்ளன என்றும் நீதிபதி ஜெ.பி. பர்திவாலா மற்றும் நீதிபதி மகாதேவன் அமர்வில் தெரிவித்தார்.

அப்போது நீதிபதிகள், தமிழ்நாடு ஆளுநர் மற்றும் அரசுக்கு இடையேயான விவகாரம் முடிவு எட்டப்பட்டுள்ளதா? அல்லது பழைய நிலையை தொடருகிறதா ? என வினவினர்.

அதற்கு தமிழ்நாடு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் சிங்வி ,மூகில் ரோத்கி மற்றும் பி. வில்சன்

ஆளுநர் அரசு இடையேயான மோதல் போக்கு என்பது பல்வேறு விவகாரங்களில் தொடர்ந்து கொண்டு வருகின்றன இது வரை முடிவுக்கு வரவில்லை என கூறியதோடு

இந்த விவகாரத்தில் தற்போது துணை வேந்தர்கள் நியமன பிரச்சினையும் வந்துள்ளது, அரசின் அனைத்து அதிகாரத்திலும் தலையிட்டு வருகிறார், முன்னதாக உச்ச நீதிமன்றம் கூறியும் ஆளுநர் நடவடிக்கையில் எந்த முன்னேற்றமும் இல்லை என எடுத்துரைத்தனர்.

மேலும் துணை வேந்தர் நியமனம் தொடர்பான கூடுதல் மனுவையும் முந்தைய வழக்கோடு இணைத்து விசாரணைக்கு ஏற்க வேண்டும், பல்கலைக்கழக துணை வேந்தர் நியமனம் தொடர்பான கூடுதல் மனு மீது புதிய நோட்டீஸ் பிறப்பிக்க வேண்டும் என கோரினர்.

அதற்கு பதிலளித்த நீதிபதிகள் இந்த வழக்கில் புதிய நோட்டீஸ் பிறப்பிக்க தேவையில்லை, அதே வேளையில் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான தமிழக அரசின் கூடுதல் மனுவை விசாரணைக்கு ஏற்பதாக தெரிவித்தனர்.

அதேபோல இந்த விவகாரங்களில் தீர்வு எட்டவில்லை என்றால் நீதிமன்றம் தீர்வு காணும் என தெரிவித்து, மத்திய அரசின் தலைமை வழக்கறிஞரின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு ஆளுநர் அதிகாரம் தொடர்பான வழக்கு விசாரணையை ஒரு வாரத்துக்கு ஒத்திவைப்பதாகவும்,

அன்றைய தினம் இறுதி விசாரணை நடைபெறும் என்றும் திட்டவட்டமாக தெரிவித்தனர்.